திரு. பா. நாகலிங்கம் : தலைவர் அவர்களே, ஐ. ஆர். 8 முன்னதாக 370 ரூபாயிலிருந்து வந்தது. செங்கற்பட்டு மாவட்டத்திலே பல பகுதிகளில் ஐ. ஆர். 8 சாகுபடிக்குப் பயன்படவில்லை. அதனால் விவசாயிகளுக்கு............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வேறு கேள்வி.

திரு. கே. பி. எஸ். மணி : சிஓ. 29 என்ற அதிக விளைச்சல் தரக்கூடிய தானியம் தஞ்சாவூரில் பெய்ல்யூராகி அதனால் விளைச்சல் குறைந்துவிட்டதாலே அதிகாரிகளே அந்த விதையைக் கொள்முதல் பண்ணவேண்டியதில்லை என்று சொல்லியிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சிஓ. 29 சாகுபடிக்கு கடைசி 2 மாதத்திற்குத் தண்ணீர் வேண்டியிருக்கிறது. ஏடிடி. 5, சிஓ. 31 ஆகிய ரகங்களை சாகுபடி செய்வதற்காக அரசாங்கம் விவசாயிகளுக்கு வழங்குகிறது.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, சென்ற முறை நெல்லை மாவட்டத்தில் ஐ. ஆர். 8 நெல்லில் அதிகமாக கலப்பு இருந்தன் காரணமாக அதிகமாக விளைச்சல் இல்லை என்று கூறப்படுகிறது. கலப்பு இல்லாத நெல்லை அரசாங்கம் கொடுக்குமா ? மேலும் ஐ. ஆர். 8, ஐ. ஆர். 5 போன்ற ரகங்களை ஹை ஈல்டிங் வெரைட்டிகளை விவசாயிகள் பயிரிடுவதற்கு தரக்கூடிய முறையில் அரசாங்கம் ஏதாவது இன்சென்டிவ் கொடுக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஐ. ஆர். 8 போன்ற பொறுக்கு விதைகளில் கலப்படம் இருக்க நியாயமில்லை. எங்கே இருக்கிறது என்று அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் நல்லது. ஐ. ஆர். 8, 5 போன்றவற்றை சாகுபடி செய்கிறவர்களுக்குக் கூடுதலாக இரசாயன உரம் தேவைப்படுகிறது. எவ்வளவு வேண்டுமானாலும் அந்த உரம் கிடைக்கின்ற சூழ்நிலை இருப்பதாலே விவசாயிகள் தகுந்த யோசனையின் பேரில் பயிர்செய்தால் நல்ல விளைச்சல் ஏற்படும்.

AUSTRALIAN JERSEY BULLS

*391 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether Australian jersey bulls were received by the Animal Husbandry Department during February and April 1968; and

(*b*) if so, the particulars thereof ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) & (இ) சென்னைத் துறைமுகத்தில் 1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27-ம் தேதியிலும், 1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதியிலும் கொழும்புத் திட்டத்தின்கீழ் 150 வெளிநாட்டுக் கால்நடைகள் இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றில் இந்திய அரசு 20 ஜெர்சி காளைகளைத் தமிழ் நாட்டிற்கென ஒதுக்கிவிட்டு எஞ்சிய காளைகளை பிற மாநிலங்களுக்கு ஒதுக்கியது. சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் உள்ள கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டத்திற்கென ஒவ்வொரு திட்டத்திற்கும் 6 ஜெர்சி காளைகள் வீதம் வழங்கப்பட்டுள்ளன. இரண்டு காளைகள் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளன.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், இந்த ஜெர்ஸி காளைகளை வழங்குகின்ற நேரத்தில் நெல்லை மாவட்டத்திற்கு ஒரு காளை கூட வழங்காமல் இருக்கிறார்கள் அது ஏன் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இங்கே, இப்பொழுது வழங்கி இருக்கிற இடங்கள் பற்றி குறிப்பிட்டேன். அந்தத் திட்டம் மேம்பாடாக இருக்கிற பகுதிகளில் மட்டும்தான் இதை வழங்கி இருக்கிறார்கள். அவர்கள் மாவட்டத்திற்கு தேவை என்றால் அந்த கோரிக்கையை பரிசீலனை செய்யலாம்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know the places where jersey breed develops well and whether there is any new scheme with the Government to improve this breed in our State?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அன்னிய நாட்டிலிருந்து நமக்கு உதவி கிடைக்கின்றதனாலே நமது உள்நாட்டு மாடுகளோடு அதை கலக்கச் செய்து, அதன்மூலமாக இவைகளினுடைய தரத்தை உயர்த்துவதற்கு பரீட்சார்த்தமாக மூன்று மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இங்கு பரீட்சார்த்தமாக சென்னையிலே வெட்டரினெரி காலேஜுக்கு இரண்டு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்தேன். இனிதான் அவைகளை மேம்பாடுக்கு கொண்டு வருவதற்கு வேண்டிய முயற்சிகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : கோவை மாவட்டத்திற்கு 6 காளைகள் வழங்கப்பட்டன என்று குறிப்பிட்டார்கள். கால்நடை ஏற்றத்திற்கு இவை போதுமானதாக இருக்கின்றன என்று அரசு கருதுகிறதா, அல்லது மேலும் வழங்க முற்படுமா என்று அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 6 காளைகள் நிச்சயமாக போதாது என்று அரசு கருதுகிறது. அது போதாது தான். 18 காளைகளை மூன்று மாவட்டங்களுக்கு, மாவட்டத்திற்கு 6 என்றும், அதல்லாமல் இரண்டு காளைகளை சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரிக்கும் அரசு வழங்கியிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : It is said that the Government have received some jersey cows. May I know from the Hon. Minister for Agriculture whether the Government have any proposal to start a jersey farm anywhere in the State and also the reason why the proposed site in Hosur Taluk was given up ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : ஜெர்ஸி காளைகள்தான் வழங்கப் பட்டதாக நான் அறிவித்தேன். அவர்கள் இங்கு காளைகளைப் பற்றி கேட்காமல் பசு பற்றி கேட்கிறார்கள். அந்த திட்டம் கைவிடப்படவில்லை என்பதை என்னுடைய மானியத்திலே பதில் அளிக்கும்போது தெரிவித் தேன். அதையே மீண்டும் கேட்கிறார்கள். இடம் கிடைப்பதிலேதான் சங்கடம் இருக்கிறது. தகுதியான இடம் கிடைத்தபிறகு அந்த திட்டம் மேற்கொள்ளப்படும். எந்த அரசியல் நோக்கத்தோடும் அதை கைவிடுவ தாக இல்லை என்பதை மட்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உர விலை.

* 392 வினா.—திரு. கரு. சிமைச்சாமி : மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உர விலையை மத்திய சர்க்கார் உயர்த்தி இருக்கிறதா ?

(இ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன ?